உ

செட்டிநாடு

திங்கள் இருமுறை

சமய வளர்ச்சி, மொழியாக்கம் கருதி உழைப்பது.

மலர்-26] துன்முகி- தை–11 24-1-57 [இதழ்-7

ஆசிரியர்:- **பாலகவி இராமநாதன் செட்டியார்**



திருவளர் மதுரை ஞானசம் பந்த தேசிகன் றிகழ்மர போங்க
மருவள ரிருநா றடுத்ததொண் ணூற்றொன் றுவதா வருமொரு
ருருவளர் சுவாமி நாததே சிகனு ருயர்பரி பூரண முறுநாள் [குரவ
குருவளர் முரசில் துன்முகி சிலைமூ வெட்டினிற் குபேரனன் னாளே,

:—பாலகவி

முரசு:உத்திரட்டாதி, சிலை-மார்கழி, குபேரன்நாள்-திங்கட்கிழமை



பாலை

தலைவன் பிரிந்து சுரநெறியிற் சென்றதை அறிந்த தலைவி, சுரத்தின் கொடுமையை நினைந்துவருந்துதலும், அதுகண்ட தோழி மழைபெய்தலினாலே சுரம்பொலிவுடையதாயிருக்கிறதென்று கூறி அவளை ஆற்றுவித்தது.

நெடுவான் மின்னிக் குறுந்துளி தலைஇப்
படுமழை பொழிந்த பகுவாய்க் குன்றத்
துழைமா னம்பிணை தீண்டலி னிழைமகள்
பொன்செய் காசி னொண்பழந் தாஅங்
குமிழ்தலை மயங்கிய குறும்ப லத்த
மெம்மொடு வருதியோ பொம்ம லோதியெனக்
கூறின்று முடையரோ மற்றே வேறுபட்
டிரும்புலி வழங்குஞ் சோலைப்
பெருங்கல் வைப்பிற் சுரனிறந் தோரே. **274**

:-காவன்முல்லைப்பூதனார்

கரிய புலி சினத்தால் வேறுபட்டு உலாவுகின்ற சோலையையுடைய பெரிய மலையிடத்துள்ள சுரத்திற்சென்ற நம் காதலர், நீண்ட மேகங்கள் மின்னிச் சிறுதுளிகளாகப் பெய்யத் தொடங்கிப் பெருமழை பெய்த பிளப்புக்களையுடைய மலைச்சாரலிலே உழையாகிய அழகிய பிணைமான் உராய்ந்ததால் கலனணிந்த அழகிய ஒருபெண்ணினது பொற்கலன்களைப் பரப்பினாற் போல ஒள்ளிய பழங்களுதிர்ந்த குமிழமரங்கள் நிரம்பிய சிறிய பல வழிகளையுடைய சுரநெறியிலே செறிந்த கூந்தலையுடையவளே! நீ எம்முடன் வருகின்றனையோ? என்று கூறிய சொல்லையும் நாம் உடையோம்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக சுவாமிகள்

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் 291-வது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சென்ற 7-1-57 திங்கட்கிழமை இரவு தங்கள் ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் ஒன்ருக விளங்குகின்ற பன்னகதெருவில் சிவபரிபூரணம் ஆகியிருக்கிருர்கள்.

ஆதீன முதற்குரவராகிய திருஞானசம்பந்தப்பெருமானர் பிள்ளைப் பருவத்திலேயே சோழநாட்டிலிருந்து பாண்டிநாட்டிற்கு வந்து பொய்ச்சமயக் களை களைந்து மெய்ச் சமயப் பயிரைத் தழைக்கவைத்ததுபோல நமது குருமூர்த்திகளும் பிள்ளைப் பருவத்திலேயே தாம் அவதரித்த சோழநாட்டிலிருந்து மதுரைக்கு வந்து ஆதீன ஞான குரவராய் அமர்ந்து சைவப்பயிர் தழைக்கும்படி செய்தார்கள்.

இவர்கள் தோன்றியது பிள்ளையார் புரிந்த அனல் வாதத்தில் ஏட்டைப் பச்சையாக வைத்திருந்த பதிகத்தைப்பெற்ற, திருநள்ளாற்றை யடுத்த செல்லூரிலாகும். இவர்களைச் சென்ற சய-ஆண்டு (62ஆண்டுகளுக்குமுன்) ஆனித்திங்களில் தமக்கு இளவரசாக அப்போதைய குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முறைப்படி அபிஷேகம் செய்து ஏற்றுக்கொண்டார்கள். அப்போது இவர்களுக்கு வயது பத்து.

ஒன்றரை ஆண்டுகளுக்குப்பிறகு மன்மத-தை யில் மகா சந்நிதானம் அவர்கள் பரிபூரணமாக, இவர்கள் மகாசந்நிதானம்

ஆனார்கள். அந்த முதல் நாளது வரை அறுபத்தொரு ஆண்டு கள் ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்தார்கள்.

இவர்களது ஆட்சியின்கீழ் மதுரைத் திருக்கோயிலும் இராமேசுவரம் திருக்கோயிலும் இருந்தன. வடமொழி, தென்மொழி, ஆங்கிலமாதிய மொழிகளைக் கற்று வல்ல புலமையும் சைவசித்தாந்த ஞானநூல்களில் தெளிந்த பயிற்சியும் இவர்களுக்கு உண்டு.

காட்சிக்கெளிய மாட்சிமையுடையவர்களாகிய நம் குருமூர்த்திகள் தமக்குப் பிற்றோன்றலாக ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களைச் சென்ற விசய ஆண்டு வைகாசித்திங்கள் பதினைந்தாம் நாளில் அபிடேகஞ் செய்து இளவரசாக்கிக் கொண்டார்கள். இவர்கள் திருமரபு நீடு வாழ்வதாக! :-பாலகவி

திருஞானசம்பந்தர் பதிகப்பதிப்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருஞான சம்பந்தர் திருக்கோலக்காவில் பாடியருளிய திருப்பதிகத்தைச் சலவைக் கற்களிலே பொறிக்கச்செய்து, திருக்கோலக்காத் திருக்கோயிலுக்கு வழங்கியுள்ளார்கள். இப் பதிகக் கற்கள் 30-12-56உ திருக்கோலக்கா திருக்கோயிலில் பதிக்கப் பெற்றன.

கல்லெழுத்துப் பதிப்பு

திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்கொடையால் கீழ்க்கண்ட தலங்களில் சலவைக் கற்களில் தேவாரப் பதிகங்கள்

முதலியன 40,000 ரூபாய் (நாற்பதினாயிரம்) செலவில் அமைக்கப்பெற்றுள்ளன.

தலம்	ஆசிரியர்	செய்யுள் முதற் குறிப்பு
1 திருச்செந்தூர்	குமரகுருபரர்	பூமேவு செங்கமல
2 மதுரை	,,	காலத்தொடு கற்பனை
,,	,,	தொடுக்கும் கடவுள்
,,	,,	புழுகுநெய்ச் சொக்கர்
,,	சம்பந்தர்	மந்திரமாவது நீறு
,,	திருவள்ளுவர்	திருக்குறள்□
3 கழுக்குன்றம்	மணிவாசகர்	பிணக்கிலாத
4 சிதம்பரம்	,,	நமச்சிவாயவா அழ்க
5 திருவண்ணுமலை	சேந்தனுர்	மன்னுகதில்லை
,,	மணிவாசகர்	ஆதியுமந்தமுமில்லா
6 காஞ்சி (எகாம்பரநாதர் ஆலயம்)	சுந்தரர்	ஆலந்தானுகந்தானை
7 மைலாப்பூர்	சம்பந்தர்	மட்டிட்டபுன்னை
8 திருநெல்வேலி	,,	மருந்தவை மந்திரம்
9 திருவாரூர்	சுந்தரர்	தில்லைவாழ் அந்தணர்தம்
10 திருக்குற்ருலம்	சம்பந்தர்	திருந்தமதிசூடி
,,	,,	வப்பார்குன்றம்
,,	திருநாவுக்கரசர்	தலையே நீ வணங்காய்
11 திருப்புன்கூர்	சுந்தரர்	அந்தணாளன்
12 சீகாழி	சம்பந்தர்	தோடுடைய செவியன்
13 மறைக்காடு	திருநாவுக்கரசர்	பண்ணின்நேர்மொழி
,,	சம்பந்தர்	சதுரம்மறை
14 திருவையாறு	திருநாவுக்கரசர்	மாதர்ப்பிறைக்கண்ணி
15 திருப்பனந்தாள்	சம்பந்தர்	கண்பொலிநெற்றியினுன்
16 திருவிடைக்கழி	சேந்தனுர்	மாலுலாமனந்தந்து
17 அவிநாசி	சுந்தரர்	எற்ருன் மறக்கேன்

□ மதுரை பொற்ருமரை வாவியின் கரையில் 1330 குறள்களும் சலவைக்கற்களில் அமைக்கப்பெற்றன,

தலம்	ஆசிரியர்	செய்யுள் முதற் குறிப்பு
18 திருவதிகை	திருநாவுக்கரசர்	கூற்ருயினவாறு
19 திருவெண்ணெய் நல்லூர்	சுந்தரர்	பித்தாபிறைசூடி
20 திருமருகல்	சம்பந்தர்	சடையாயெனுமால்
21 சுவாமிமலை	அருணகிரிநாதர்	ஆடும்பரிவேல்
22 வைத்தீசுவரன் கோயில்	குமரகுருபரர்	ஒழியாத புவனத்து
,,	,,	தருமன்னுபொன்னுலகு
23 திருவோத்தூர்	சம்பந்தர்	பூத்தேர்ந்தாயன
24 திருச்சிராப் பள்ளி	சம்பந்தர்	நன்றுடையானை
,,	திருநாவுக்கரசர்	மட்டுவார்குழலாள்
25 வடதிருமுல்லை வாயில்	சுந்தரர்	திருவும்மெய்ப்பொருளும்
26 பழநி	அருணகிரிநாதர்	நாதவிந்துகலாதீநமோநம
27 திருத்தெளிச் சேரி	சம்பந்தர்	பூவலர்ந்தன
28 திருக்கோலக்கா	,,	மடையில் வாளை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அரன்நாமம் எங்கும் விளங்கும் வண்ணம் ரூ 10,000 செலவில் 'சிவசிவ' ஒளிவளர் விளக்கால் தீபாலங்காரம்செய்துள்ள திருத்தலங்கள்

1 சுவாமிமலை (திருவேரகம்), 2 திருச்செந்தூர், 3காஞ்சி(குமர கோட்டம்) 4 காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயம், 5 மயிலாப்பூர், 6 திருத்தணிகை, 7 திருப்பனந்தாள் செஞ்சடை வேதியர் ஆலயம், 8 மதுரை 9 திருக்குடந்தை ஸ்ரீ கும்பேசுவரர் ஆலயம், 10 திருப்பரங்குன்றம், 11 திருக்கழுக்குன்றம், 12 திருவையாறு 13 தருமபுர ஆதீன மடாலயம், 14 வைத்தீஸ்வரன்கோவில், 15 திருக்கடவூர், 16 சீகாழி, 17 திருவண்ணமலை, 18 திருவானைக்கா, 19 திருச்சிராப்பள்ளி, 20 திருவாதவூர், 21 விருத்தா

சலம் (திருமுதுகுன்றம்) 22 திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், 23 திருவேட்டீசுவரன்பேட்டை, 24 தென்காசி, 25 திருவொற்றியூர்

அதிபர் விழா

நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலையின் அதிபர் திரு, பழனியப்பரின் 86ம் பிறந்தநாள் பெருவிழா 7-1-57ல்நடை பெற்றது. காலையில் பழநியப்பரின் திருவுருவப்படம் தேரில் வைத்து அலங்கரிக்கப்பெற்று ஊர்வலம் நிகழ்ந்தது. அப்போது அப்பர் இல்லத்தில் குழந்தைகளுக்கு இனிப்பும், கனிகளும்வழங் கப்பெற்றன. லெ. ஈரு. இராமசாமிச்செட்டியார் அவர்கள் இல் லத்திலும், திரு, சண்முகஆசாரி அவர்கள் அலுவலகத்திலும் இனிப்புகள் வழங்கப்பெற்றன.

பிற்பகலில் திருப்பத்தூர் வட்டக் கல்வித்துறைத் தலைவர் உயர்திரு, H. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் குழந்தை களின் ஆடல், பாடல், நடிப்பு, பேச்சு முதலியன நிகழ்ந்தன.

கோட்டையூர் அழகப்பா மகளிர் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளர் திருமதி ந. சரோஜினிதேவி எம். ஏ., அவர்கள் 'சிற் றுயிர்க்கு உற்ற துணை' என்ற தலைப்பில் அழகுறப்பேசினார்கள். தலைமை ஆசிரியர் திரு, கி. ஆராவமுதன் அவர்களால் நன்றிநவி லப் பெற்று நாட்டுவாழ்த்துடன் கூட்டம்இனிது நிறைவேறி யது.

புனர்வாழ்விப்பு

கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவர் களின் புனர்வாழ்விப்பு சம்பந்தமான 16திட்டங்களுக்கு யூனி யன் சர்க்கார் 1956 செப்டம்பர் மாதத்தில் அனுமதியளித்திருக் கின்றனர்.

காஞ்சி மெய்கண்டார் கழகம்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் 5வது பட்டம் ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் 15வது குருபூசை, ஏகாம்பரநாதர் கோவில் வழிபாட்டுடன் மிகச் சிறப்பாகநடைபெற்றது. சித்தாந்த ஞானபானு திரு, க. வச்சிரவேல் முதலியார் B A. L T, தலைமை தாங்கினர்கள். கழகச்செயலாளர் திருஞானசம்பந்த முதலியார் 'புலிசையடிகளாரின் புனித வாழ்வு' என்பது பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றி, தற்காலச் சொற்பொழிவாளர்கள் பின்பற்றவேண்டிய பண்புகளும் சொற்றிறமும் சுவாமிகளிடத்தில் அமைந்திருந்தன என்பன போன்ற நல்லியல்புகளை விளக்கிப் பேசினர்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் அந்நியநாடுகள் முதலீடு செய்துள்ள தொகையின் மொத்த அளவு 1948லிருந்து 1953க்குள் 112.12 கோடி ரூபாய் அதிகரித்திருந்தது.

இந்திய சர்க்கார் ரயில்வேக்கள், 1955-56ல் மொத்தம் 1140.5 லட்சம் டன் சாமான்களை ஏற்றிச் சென்றன. முந்தியவருஷத்தில் ஏற்றிச் செல்லப்பட்டதைக் காட்டிலும் இது 7.8 சதவிகிதம் அதிகமாகும். சரக்குப் போக்குவரத்துமூலம் இவ்வருஷத்தில் மொத்தம் 177.43 கோடி ரூபாய் வருமானமாகக் கிடைத்தது. இது சென்ற வருஷத்தில் கிடைத்ததைக் காட்டிலும் மொத்தம் 21.48 கோடிரூபாய்-அதாவது 13.8 சதவிகிதம் அதிகமாகும்.

இந்திய ரயில்வேக்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் நாளொன்றுக்கு அதிகப்படியாகச் சராசரி 95 பேர் வீதம் ஐந்து வருஷத்தில் மொத்தம் சுமார் 1,65,000பேரை வேலைக்கெடுத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்தபண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

கொடுத்தால் மாதாவை மதிக்கவில்லை யென்பதாகாதா? மொழியைத் தாயெனக் கும்பிடும் நவீனர் அதனைச் சிந்திக்க. இன்னொன்று வைணவம் புறச்சமயங்க ளாறனுள் ஒன்று. புறமாவது வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடல். அச்சமயம் வேதத்தைச் சேற்றில் நட்ட கம்பமெனக் கூறி நிந்திக்கும். அது அந்நூலை நாலாயிரத்துக்குப் பின் தள்ளலாம். அச்செயலை வைதிக சைவமுங் காப்பியடிக்க வேண்டுமா?

இனி வடகலை, தென்கலை விருத்தாந்தத்தைச் சிறிது பார்க்கலாம். 'பொதுவாக சமயத்துறையில் தமிழுக்கு முதலிடம் தர வேண்டுமென்ற கிளர்ச்சி சில நூற்றுண்டுகளுக்கு முன்பே தோற்றுவிக்கப்பட்டது. குறிப்பாக, வைணவ சமயத்தில்தான் இந்தக் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. இதன் விளைவாக, வைணவர்களிடையே வடகலையா ரென்றும், தென்கலையாரென்றும் இரண்டு பிரிவுகள் தோன்றி நிலைத்துவிட்டன' (ஒலி 11, குரல் 1, தமிழன் குரல்) என்கிறுர் நவீனர். 'பொதுவாக' என்பதன் கருத்து வேறு சமயங்களுஞ் சேர்ந்து அக்கிளர்ச்சி செய்தன என்பதா? அவை யாவை? வேருயின் அக்கருத் தென்னை? சில நூற்றுண்டுகளுக்கு முன்பே என்றதால் அக்காலம் குறைந்தது 200 ஆண்டுகளுக்கு முன்புள்ளதாகும். 'தோற்றுவிக்கப்பட்டது' என்பது செயப்பாட்டு வினைமுற்று. வினைமுதலாவார் இவரென நவீனர் காட்ட மாட்டாமல் தவிக்கிறுர். அவ்வாக்கியம் அம்முற்றால் முடிக்கப்பட்டதற்கு அதுவே கருத்து. அக்காலத்தில் அக்கிளர்ச்சியை வினைமுதலாயிருந்து தோற்றுவித்த மனிதர் யார்? அவர் இவர், இன்ன தரத்தினர் என்பது தெரியவேண்டும். இன்றேல், அக்கிளர்ச்சியைப் பொறுப்புள்ளவர் ஏற்கமாட்டார். 200 ஆண்டுகளுக்கு மேலாகியும் அக்கிளர்ச்சி நாளிதுவரை பலிதமடையவில்லை. அதனுல் அம்மனிதர் ஓரசத் தென்பதே சித்தம். பிறகு

'குறிப்பாக' என்று தொடங்கி வைணவசமயத்தில்தான் இந்தக் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று என்ருர் நவீனர். ஆரம்பத்தில் வைணவம் முழுக்க வடகலையா யிருந்து வைணவர் சிலர் தென் கலையாரென இடையிற் பிரிந்தனரா? தென்கலையா யிருந்து அவருட் சிலர் வடகலையாரென இடையிற் பிரிந்தனரா? தென்கலையா எங்ஙனமாயினும், ஒன்றேயாயிருந்த அச்சமயம் இரண்டு பிரிவுகளாகப் பிளந்தது. சமயத்துறையில் தமிழ் முதலிடம் பெற முயன்றதன் விளைவு அது. அப்பிரிவுகள் நிலைத்தும் விட்டன. அது நல்லதா? சைவத் துறையிலும் அத்தமிழ் முதலிடம் பெற முயன்றதன் விளைவு அது. அப்பிரிவுகள் நிலைத்தும் விட்டன. அது நல்லதா? சைவத் துறையிலும் அத்தமிழ் முதலிடம் பெறப்புகுந்து அன்னதொரு பிளவை யுண்டாக்க வேண்டுமா? கேட்டையெடுத்து நலம்போற் காட்டிச் சைவரை வஞ்சிப்பது தமிழர் பண்புபோலும். இழவுக்கு வந்தவரெல்லாம் தாலியறுக்க மாட்டார். பிளவை கண்டாற் படுவது சைவசமூகமே.

'ஆனுல் தென்கலையின்...கோயில்களில்கூட அருச்சனை முறை மட்டும் இன்றளவும்வடமொழியில்தான்நடைபெறுகின்றது.வடகலையினர்...கோயில்களைப்பற்றிச்சொல்லவேண்டியதேயில்லை'(ஷ) என்கிருர் நவீனர். அங்ஙனமாயின் மொழிக்கிளர்ச்சிக்கு அப்பாற்பட்டதே அர்ச்சனை விஷயம் என்பதை அவர் அறியாமற் போனதேன்? 'அருச்சகர்கள்...செய்யும் பூசை, அருச்சனை முதலியவைகளைத் தமிழிலேயே செய்யவேண்டுமென்றே, தமிழிலும் செய்யவேண்டுமென்றே சொல்வது சாத்திரங்களுடன் பொருந்தாது' (25-5-55 தமிழ்நாடு) என்கிருர் அகோபில மடத்துத் தலைவர். அவர் தென்கலையார். நவீனர் சிந்தனைசக்தியை இழந்து விட்டனரோ? பாவம். வாதமே அர்ச்சனையொன்றே பற்றியது தான். அவ்வகையில் தென்கலையாரும் நவீனரைத் தெருவில் விட்டனர்.

சுந்தரர் காலத்தில் சைவக்கோயில்களில் தமிழுக்கு முதலிடமிருந்ததாம்; நவீனர் சொன்னர். ஆதாரமின்றி வாயில் வந்தன

(12ம் பக்கம் பார்க்க)



உ
சிவமயம்
பாலரூவாயர் துணை

'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து'

சந்தா:
உள்நாடு ரூ—3
வெளிநாடு ரூ–6

செட்டிநாடு

துன்முகி தை-11

நமசிவாய மூர்த்திகள்

திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதம பரமாசாரியாராகிய ஸ்ரீநமசிவாய தேசிக மூர்த்திகளது திருநாள் **6-2-57** புதன்கிழமையாகும். திருக்கயிலாய மலையிலுள்ள தென்முகக் கடவுள், சிவாகம சாரமாகிய சிவஞானபோதத்தைத் திருக்கையில் தாங்கிக் கொண்டிருக்கின்றார்.

சிவாகமங்களின் ஞானபாதப் பொருளுண்மையறியாது மலைவுற்று வினவிய நந்தியம்பெருமானுக்குச் சிவஞான போதத்தின் வாயிலாகவே சீகண்ட பரமசிவன் உண்மையை அறிவுறுத்தினர். அந்தச் சிவஞானபோத நன்னெறியை மெய்கண்டதேவர் திருக்கயிலாய பரம்பரையிற் பெற்று, நிலவுலகத்திற்கு உபதேசித்தருளினர்.

அவ்வுபதேசம் வழிவழியாக இங்கே நிகழ்ந்து அத்துவித வுண்மை நிலைநிற்றற் பொருட்டுத் துறைசை யாதீனத்தை நமசிவாய மூர்த்திகள் நிறுவியருளினர்கள். அவர்களாலும் அவர்களுக்குப் பின்னே அந்த ஞானபீடத்தில் அமர்ந்து அருளாட்சி புரிந்த சிவஞானச் செல்வர்களா

லும் உபதேச முறையில் சிவஞானபோதநெறி உலகத்தில் விளங்கிக் கொண்டு வருகிறது.

சிவஞானபோதத்திற்கும் அதனை ஒட்டிய ஏனை மெய்கண்ட நூல்களுக்கும் தோன்றுதோட்டுத் துறைசை யாதீனத்தால் கிடைத்து வருகின்ற விளக்கங்கள் கணக்கில் அடங்காதனவாகும். சிவஞான சுவாமிகள் போன்ற ஞானதான வள்ளல்களை யீந்து மாபாடியம் முதலிய பேருரைகளை வழங்கி, அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியைப்பரப்பியது துறைசையாதீனமேன்பதை அறியாதார் யார்?

மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானுவாக விளங்குகின்ற நமசிவாய மூர்த்திகளைத் தற்போதைய குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்கள் முகமாகத் தேரிசித்து நல்லின்பம் பெறுவது நமது கடமையாகும்.

தேதிப்படங்கள் வரப்பெற்றோம்:

சென்னை நெல்சன் கம்பெனியார் வெளியிட்டது. ஆங்கிலத் தேதி, அரசினர் விடுமுறை நாட்கள், விசேடநாட்கள் விவரமடங்கிய மாதத்தேதிப்படம்.

சென்னை மதராஸ் டைப் பவுண்டரிவெளியிட்டது. ஆங்கிலத் தேதி, அரசினர் விடுமுறைநாட்கள். விசேட நாட்கள் விவரமடங்கிய மாதத் தேதிப்படம்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவதில் அவரை அதிகரிக்க யாராலு முடியாது. 'அது (அருள்நெறி) இடைக்காலத்தில் வந்தது அல்ல. அது காலம் கடந்தது' (28-2-56 தமிழ்நாடு) என்கிறாரவர். அவர்தானே 'மனிதன் என்று அறிவுபெற்றானோ அன்றே அருள்நெறியின் தொடக்க காலம்' (28-2-56 தமிழ்நாடு) எனக்கூறி அதற்கொரு தொடக்க காலமுங் காட்டுகிறார். மனிதன் அறிவுபெற்றதுங் காலங்கடந்த தாதல் வேண்டும் அல்லது அருள்நெறி காலங்கடந்த தென்பது பொய்யாதல் வேண்டும் என்றே அவ்வாக்கியங்களால் ஊகிக்கப்படும். 'தொல்காப்பியர் காலத்தில் இருந்து நிலவி வந்தது அருள் நெறி' (28-2-56 தமிழ்நாடு) என்கிறாரவர். அங்ஙனமேயாகுக. '...அருள்நெறிக்குத் திட்டம் போட்டார்கள். இவ்வாறு கருத்தை முகிழ்த்துவிட்டுச் சென்றவர்கள் ஏராளம். அவர்கள் யார், எவர் என்பது தெரியவில்லை' (28-2-56 தமிழ்நாடு) என்கிறாரவர். அத்திட்டம் போட்ட ஏராளமான பேருள் ஒருவர் பெயர் கூட இப்போது தெரியவில்லையென்றால் அக்காலத்தில் ஒருவரும் அத்திட்டம் போடவில்லை, அருள்நெறியே கிடையாது என்பதுதான் உண்மை. அல்லது அத்திட்டம் போட்டவரை யனுசரித்த பிற்காலத்தவ ரனைவரும் மறதி மன்னராய் ஆசாரிய விசுவாச மில்லாதவராய்ப் போயினரெனவுங் கொள்ளலாம். 'அருள்நெறிக்கு வித்திட்டவர்கள் சமயமாகவே மாறி விட்டார்கள்' (28-2-56 தமிழ்நாடு) என்கிறாரவர். சமயமாக மாறிவிட்டார்கள் என்பதற்கு அருள்நெறியைச் சமயமாக்கிவிட்டார்களென்பது கருத்துப்போலும். வித்திட்டவரே அப்படி ஆக்கினால் அவர்பின் செல்வோர் அதற்கழுவானேன்? அருள்நெறி சமயமன்றென இப்போது பிரசங்கிப்பவர் குருவுக்கு மிஞ்சிய சீடராய்த்தா னிருப்பார். எப்போதோ தோன்றிய அருள்நெறிக் கருத்து சிந்துநதி நாகரிக காலத்தில் உருவ வழிபடாக வளர்ந்தது எனவே சிந்துவெளி நாகரிகத்துக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அருள்நெறிக் கருத்துத் தோன்றியிருக்கவேண்டும்' (28-2-56 தமிழ்நாடு) என்கிறாரவர்.

(தொடரும்)



பாராயணச் சிவஞான போதம்:- காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக இரண்டாம் பதிப்பு. நல்ல தாளில் பக்கத்திற்கொரு திருப்பாடலாக அமையக் கையடக்கமாக இப்பதிப்பு வெளிவந்துள்ளது.

திருப்பெண்ணாகடத் திருமுறைத் திரட்டு:- காஞ்சி மெய்கண்டார் கழகத்தினர், சைவசித்தாந்த மகா சமாசத்தின் 51ம் ஆண்டு விழா நினைவின் வார வழிபாட்டு விழா மலராக வெளியிட்டது. தலவரலாற்றுச் சுருக்கமும் அடங்கியது.

திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி:- திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் இலவச வெளியீடு. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் திருவுளப்பாங்கின்படி திரு, க. சுப்பிரமணியஐயர் அவர்களால் G. U. போப் ஆங்கிலமொழிபெயர்ப்புடன் துன்முகி ஆண்டு மார்கழித் திருவாதிரை நினைவு மலராக வெளியிடப்பெற்றது.

அபிராமிபட்டர், பிரபந்தங்கள்:- ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்க வெளியீடு. திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆதரவுபெற்று வெளிவந்துள்ளது. இதில் திருக்கடவூர் அபிராமியம்மையின் அருள்பெற்ற அபிராமபட்டர் இயற்றிய கள்ளவிநாயகர் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், காலசங்காரமூர்த்தி பதிகம், அபிராமியம்மை பதிகம், அபிராமியந்தாதி ஆகிய ஐந்து நூல்கள் அடங்கியுள்ளன.

இராமானந்த அடிகளார் குருபூசை நினைவு மலர்:- கோவை, சிரவணபுரம், கௌமார மடாலயத்தை நிறுவிய அருட்பெருந்திரு, இராமானந்த அடிகளாரின் வாழ்க்கைவரலாறு பல நிழற்படங்களுடன், பதிப்பாளர் B. K. முத்துசாமிக் கவுண்டரவர்களால் வெளியிடப்பெற்றுள்ளது. விலை குறிக்கப்பெறவில்லை. கிடைக்குமிடம்:- கௌமார மடாலயம், சிரவணம்பட்டி, கணபதி, கோவை

மதுரை ஆதீனக் குருபூசை விழா:

மதுரை, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக திருஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் 10-ம் நாள் குருபூசைவிழா ஆதீனத்தைச் சேர்ந்த பன்னகதெரு திருத்தலத்தில் 16-1-57 புதன்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.

காலையில் தற்போதைய குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் ஆன்மார்த்த பூசையும், அதிகாரஉடையவர் பூசையும் சிறப்பாகச் செய்து பன்னகாபரனேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு புரிந்தார்கள்.

காலை 10மணி அளவில் குருமூர்த்த ஆலயத்தில் விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தி அடியார்களுக்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். திருமடாலயத்தில் நமது ஆசிரியர் பாலகவி இராமநாதன்செட்டியார், சித்தாந்த சைவப்புலவர் வீர. சிவசுப்பிரமணியம், குடந்தை எஸ். சுந்தரேசன் செட்டியார் ஆகியோர் 'குருவருள்' பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். நண்பகலில் மாகேசுரபூசையும், ஏழைகளுக்கு அன்னதானமும் நடந்தன.

மாலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில், திரு, வீர. சிவசுப்பிரமணியமும், பாலகவி இராமநாதன்செட்டியாரும் பரிபூரணமான குருமூர்த்திகளின் சிறப்பியல்புகளை எடுத்து விளக்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை கூறும்போது, 'திருவருளுக்குக் குருவருள் இன்றியமையாதது' என்பதை விளக்கிப் 'பரிபூரணமான மகாசந்நிதானம் அவர்கள் எப்பொழுதும், எவ்விடத்திலும் நமக்குத் துணையாயிருந்து நன்மையை வழங்குவார்கள்' என்றும் அருளினார்கள்.

இரவு ஸ்ரீ திருஞானசம்பந்தப்பெருமான் திருவுலா நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருட்கொலு அமர்ந்து

கருணைபாலித்தார்கள். பாலகவி இராமநாதன்செட்டியார் பாடிய பஞ்சரத்தினப் பாமாலை சூட்டப்பெற்றது. திருவாவடுதுறை, தருமபுரம், குன்றக்குடி ஆதீனங்களிலிருந்து தம்பிரான்சுவாமிகள், ஓதுவாமூர்த்திகளும், உள்ளூர் வெளியூர்ப் பிரமுகர்கள் புலவர்கள் அடியார்களும் திரளாக வந்து சிறப்பித்தார்கள். புலவர்களுக்கும் மற்றையோர்க்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காசும் துசும் வழங்கிக் கருணை பாலித்தார்கள்.

மறுநாள் மாலையில் ஆதீனத்தைச் சேர்ந்த திருக்கைச்சினத் திருத்தலத் திருக்கோயிலுக்கு ஆதீன அடியார்களும், புலவர்களும் புடைசூழ ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தினார்கள். வித்துவான் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் 'திருஞான சம்பந்தர்' பற்றிய பேச்சும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரையும் நிகழ்ந்தன.

அப்போது நமது ஆசிரியர் அவர்கள் 'இந்திரன்கைச் சின்னத்தை ஏற்றானைச் செஞ்சடையிற், சந்திரனைப் பாம்போடு சார்வித்து- மந்திரமாம், வெள்வளைத்தாய் பாகத்தே வீற்றிருக்க வைத்தானை, உள்வளைத்தே உற்றேன் உயர்வு' என்ற வெண்பாவைக் கூறினார்கள்.

18-1-57 காலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பன்னக தெருவிலிருந்து புறப்பட்டு மாலையில் மதுரைத் திருமடாலயத்திற்கு எழுந்தருளினார்கள். மேளதாள விருதுகளுடன் மதுரைப் பிரமுகர்கள் மடாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட்டு அருட்பிரசாதம் பெற்று அகமகிழ்ந்தார்கள்.



மதுரை திருஞானசம்பந்த
சுவாமிகள் ஆதீனம்
292வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக
சோமசுந்தர தேசிக
திருஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

பொன்னமராவதி புதுப்பட்டி

வாரவழிபாட்டுக் கழக ஆதரவில் 13-1-57 மாலையில் திருவெம்பாவை-திருப்பாவை மகாநாடு வலையபட்டி நாமகள் கல்லூரித் தலைவர் ஆ பழ. பாலசுப்பிரமணியபிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. கழகச்செயலாளர் திரு, வி. கே. இராஜ கோபாலய்யர் பி ஏ எல் டி வரவேற்புக் கூறிக் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களால் அனுப்பப் பட்ட வாழ்த்துச் செய்தியைப் படித்து 'ஹரியும் சிவனும் ஒன்றே' என்ற பிரசுரத்தைச் சபையோருக்குப் படித்துக் காட்டினார்கள்.

தலைவர், ஹிந்துமதம் மற்ற மதங்களைப்போல் ஒருதீர்க்கதரிசியால் ஆக்கப்பட்டதல்லவென்றும், சைவர் வைணவர் இருதாரத் தாரும் ஹிந்துக்களே என்றும், ஆத்மீக உணர்ச்சியில் இருதாரத் தாரும் ஒரே விதம்தான் என்றும், சைவசமயப் பெரியார் மணிவாசக சுவாமிகள் எழுதியுள்ள திருப்பள்ளிஎழுச்சி10, திருவெம் பாவை20 ஆகிய முப்பது பாக்களும், வைணவ கிரந்தமாகிய ஸ்ரீ

ஆண்டாள் அருளிய திருப்பாவை 30 பாக்களும், ஒவ்வொரு ஜீவனும் ஆண்டவன் அருள்பெற எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சியைப் பாவைநோன்பு நோற்கும் மாதர்கள் எம்பெருமான் சேவைக்குத் தயார் செய்யும் விதமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறதென்றும் ஜீவனை ஆண்டவனிடம் சேர்க்கும் என்றும் எடுத்துரைத்தார்கள்.

வலம்புரி வடுகநாதன் உயர்நிலைப்பள்ளிமாணவர் கே. தியாகராஜன் 'இறையும் தமிழும்' என்ற பொருள்பற்றிப் பேசினார். கொப்பனாபட்டிக் கலைமகள் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் திரு, ரெ. இராமமூர்த்தி அய்யர் அவர்கள் 'திருப்பாவை' என்ற பொருள்பற்றிப் பேசினார்கள். கும்பகோணம் ஆசார்யாள் அவர்களின் பெரும்பணியைப் பாராட்டித் தான் இயற்றிய கவிகளைப் படித்து, ஸ்ரீஆண்டாள் சரித்திரம் கூறி அவ்வம்மைக்குக் கிருஷ்ணன்பால் உள்ள பிரேமையைப் பல பாசுரங்கள்கொண்டு விளக்கிக்கேட்போர் மனதைக் கவரும்வண்ணம் பேசினார்கள்.

தலைவர் பண்டிதர் அவர்களின்படிப்பையும், சொல்வன்மையையும் பாராட்டி அவர் சொல்லிய கருத்துக்களை மணிவாசகர் திருவாக்கைக்கொண்டு விளக்கினார்கள். செயலாளர் நன்றி கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது.

திருவாவடுதுறை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதம பரமாசாரியர்ஸ்ரீபஞ்சாக்கரதேசிகமூர்த்திகள் குருபூசைவிழா 28-1-57 முதல் 6-2-57 வரை நடைபெறும். முதல் மூன்றுநாட்கள் ஆதீன மடாலயக் கொலுமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருமுன்பு நான்காவது ஆண்டு திருமந்திர மாநாடு தக்க பெரியோர்கள் தலைமையில், சைவசித்தாந்தப்பேரறிஞர்கள் பலர் விரிவுரையாற்ற, நடைபெறும். 31-1-57 முதல் 6-2-57வரை சைவசமயச்சொற்பொழிவுகளும், இசைநிகழ்ச்சிகளும் நிகழும்.

தொடர் நாடகம்:

தியாகச்சுடர்

சித-சேதுராமன்

(முன்தொடர்ச்சி)

[சிலம்பு கண்ட கண்ணகி, வெகுண்டு அதை எடுத்து உடைக்கிருள். தெரித்த மாணிக்கப் பரல்கள் வேந்தனின் முகத்தில் துள்ளிக்குதித்தன.]

மன்னன்:- நீதியின் பிறப்பிடமாய்த் திகழ்ந்த தமிழ்நாடே! சிறப்புமிகு தென்னகமே! தமிழ்ச்சங்கம் கண்டு தனிப்புகழ் கொண்ட பாண்டிநாடே! கதவு தட்டிய குற்றத்திற்காகக் கையைக் குறைத்த பொற்கைப்பாண்டியனை அரசபீடத்தில் பெற்ற மதுரைமாநகரே! நானு அரசன்? இல்லை. இல்லை. நானே கள்வன்; அறத்தைக்கொன்ற நானே கள்வன். (மயங்கிவிழுகிருன். திரைவிழுகிறது. தலைவர் முடிவுரை கூற விழா இனிது நிறைவெய்துகிறது]

காட்சி-4

விழிகளைப் பறிக்கும் விந்தைமிகு வண்ணமலர்கள், காதுக்கினிமையூட்டும் வண்டினங்களின் ரீங்காரம், அள்ளிப் பருக நீரோடை, அனைத்தையும் அணைத்த பூந்தோட்டம். தேன்மொழியும் பாண்டியனும் சந்திக்கின்றனர்.

தேன்மொழி:- பாண்டியன்! நேற்று உங்களது நடிப்பில் என்னையே மெய்மறந்துவிட்டேன்.

பாண்டியன்:- கண்ணகியாகிய உன்னைவிடவா! நீ பேசிய ஒவ்வொரு சொற்களும் என்னை உன்பால் வசப்படுத்தி விட்டன.

தேன்:- நம் உறவு ஊருக்குத் தெரிந்தால்......

பாண்:- நகைப்பார்கள்' என்று அஞ்சுகிருயா? தாழ்ந்தாலும், வாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது. நீதான் இவ்வுலகிலே எனக்கு இணையற்ற செல்வம். சந்திரனைவிட்டு ஒளி அகன்ற

லும், மலரைவிட்டு மணம் நீங்கினலும், இவ்வுலகமே எதிர்த்து வந்தாலும் நான் உன்னைவிட்டு வேறு மணம் செய்து கொள்ள மாட்டேன்.

தேன்.- அத்தான்! (பெருமூச்சுவிடுதல்) அதோ பாருங்கள். இயற்கை எழில் ததும்பும் காட்சிகளை.

பாண்:- மின்னலைப் பழிக்கும் இடையும், கயலைப் பழிக்கும் விழியும், மதியைப் பழிக்கும் முகமும்கொண்ட நீ அருகிலிருக்கும்பொழுது அந்த அழகை ரசிக்கமுடியவில்லையே!

தேன்:-போங்கள் அத்தான்.

காட்சி-5

[தேன்மொழியின் வீடு. பாண்டியன் நிழற்படத்தை வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிருள். அப்போது குமார் வருகிருன். தேன்மொழி மறைக்கிருள் குமார் பார்த்துவிடுகிருன்.]

குமார்.- தேன்மொழி! என்னமறைக்கிருய். நான் பார்க்கக் கூடாத பொருளோ!

தேன்:- ஒன்றுமில்லை.

குமார்:- எனக்குத்தெரியும் பாண்டியனின் போட்டோ என்று

தேன்:- தெரிந்தும் என்னிடம் ஏன் வார்த்தையாடுகிறீர்கள்?

குமார்:- தேன்மொழி! ஜாதி பார்க்கும் ஒரு பணக்காரர் ஒரு தாழ்ந்த குலத்தில் பிறந்த உன்னைத் தன் மருமகளாக ஏற்றுக் கொள்ளமாட்டார்.

தேன்:- பாண்டியன் நல்லவர். உலகத்தை நன்கு உணர்ந்தவர் தந்தையின் மனதை மாற்றி விடுவார்.

குமார்:- பாண்டியன் உன்னை மறுத்துவிடுவான். அவனை நம்பிப் படுகுழியில் விழுகாதே.

தேன்:- அனல்தெரிக்கும்வார்த்தைகளால்என்னைப்பயமுறுத்த வேண்டாம். மணந்தால்பாண்டியனைமணப்பேன். இல்லையேல்மடிவேன்.

குமார்:- உனக்குரியவன் நான்தான். மாற்ருனின் மனைவியாக வாழவிடமாட்டேன். நான் வருகிறேன்.

காட்சி-6

[சாளாவின் இல்லம். அவளது தந்தை மாணிக்கம்பிள்ளை அன்றைய தினத்தாளைப் படித்துக்கொண்டிருக்கிறார். அவ்வமயம் குமார் வருகிறான்.]

மாணி:- வா குமார். ஏன் வாட்டமுடன் தென்படுகிறாய்?

குமார்:- என்ன செய்வது. நீண்டநாளாய்ப் பார்த்துவந்த பொருளை நேற்று வந்தவன் கொண்டுசெல்லப்பார்க்கிறான்.

மாணி:- என்ன சொல்லுகிறாய்? ஒன்றும் புரியவில்லையே!

குமார்:- விளக்கமாகச் சொல்கிறேன். துரைசாமி பிள்ளையின் மகன் பாண்டியன்...

மாணி:- ஆமாம் அவன்தான் என்மகளைத் திருமணம் செய்து கொண்டு எனக்கு மருமகனாக வரப்போகிறான்.

குமார்:- இல்லை. அவன் என் உடன்பிறந்தாள் மகளை - என் முறைப்பெண்ணை மணக்கப்போகிறான். அவளும் அவனையே மணக்க இருக்கிறாள்.

மாணி:- அப்படியா செய்தி! என் மகளுக்குத் துரோகம் செய்த அக்கயவனை என்ன செய்கிறேன் பார். அவனது ஆசையில் இடிவிழச் செய்கிறேன். [குமாரின் காதில் ஏதோ கூறுகிறார். அப்பொழுது முத்தையன் வருகிறான்.]

முத்தையன்:- எஜமான்! இன்னிக்குப் பத்திரிகையிலே என்னைப் பிடித்துத் தருபவர்களுக்கு பரிசளிப்பதாக வெளம்பரம் போட்டிருக்காங்க.

மாணி:- கிடக்காங்கடா. முதுகெழும்பொடுஞ்ச பசங்க. அது சரி. உனது திரண்ட தோளுக்கு ஒரு சிறு வேலை.

முத்:- என்ன எஜமான்? உங்கள் கட்டளையைச் செய்யக் காத்திருக்கேன்.

மாணி:- வேறு ஒன்றுமில்லை. நடுத்தெரு கலாவின்மகள் தேன்மொழியை இன்று இரவு 12மணிக்குநம்ம குகைக்குக் கொண்டு வந்துவிட.வேண்டும் ஜாக்கிரதை.

முத்:- ஆகட்டுங்க [போகிறான்] (தொடரும்)

நமது ஆசிரியரின் நூல்கள்

1.	பிரபந்தத் திரயம்	0-2-0
2.	மயூரகிரியுலா	0-3-0
3.	திருப்பரங்கிரி மும்மணிக்கோவைமுதலியன	0-3-0
4.	ஞானசம்பந்தர் நான்மணிமாலை முதலியன	0-3-0
5.	ஞானசம்பந்தர் நவமணிமாலை முதலியன	0-3-0
6.	திருஞானசம்பந்தர் திருப்பள்ளியெழுச்சிமுதலியன	0-3-0
7.	பிரபந்த பஞ்சகம்	0-12-0

முன்பணம் அனுப்புபவர்களுக்கு மட்டும்
அஞ்சற்செலவு இன்றி அனுப்பப்பெறும்.

கிடைக்குமிடம்:

செட்டிநாடு அச்சகம்
சம்பந்தர் தெரு,
தேவகோட்டை

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை
செட்டிநாடு அச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.